அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண் :144/2016
தேதி. :12/09/2016

# பாரா ஒலிம்பிக்கில் வென்று சாதனை படைத்துள்ள மாரியப்பனுக்கு ரூ 2 கோடி பரிசு சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி

பிரேசிலின் ரியோ டி ஜெனிலாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான பாரா ஒலிம்பிக் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டியை அடுத்த பெரிய வடகம்பட்டி என்ற குக்கிராமத்தில் வசிக்கும் மாரியப்பன் உயரம் தாண்டுதல் போட்டியில் 1.89 மீட்டர் உயரம் தாண்டி தங்கம் வென்று வரலாற்று சாதனை படைத்து இந்தியாவிற்கே பெருமை சேர்த்துள்ளார். இவரது பெற்றோர் தங்கவேல் – சரோஜா செங்கல் சூளை மற்றும் காய்கறி வியாபாரம் செய்து வருகின்றனர். BBA படித்து வரும் இவருக்கு ஒரு சகோதரியும், இரண்டு சகோதரர்களும் உண்டு. இவரது ஐந்தாவது வயதில் வீட்டின் அருகே மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் போது வலது காலின் கட்டை விரலை தவிர, மற்ற கால் பகுதிகள் சிதைந்து ஊனமானார். விளையாட்டில் மிகுந்த ஆர்வமிருந்த மாரியப்பன் தனது தன்னம்பிக்கை மற்றும் கடின உழைப்பின் மூலம் இந்தியாவுக்கு தங்க மகுடத்தை சூட்டியிருக்கிறார் என்பது மிகுந்த பெருமைக்குரியதாகும்.

என்றும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கவும், தமிழக புகழை உலக அரங்கில் மகுடம் சூட்ட வைக்கும் எண்ணத்தோடும் பயணிக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தங்கப்பன் ஒலிம்பிக் போட்டியில் வென்ற தகவல் அறிந்த உடனேயே ரூ. 2 கோடி பரிசுத் தொகை அறிவித்து அவருக்கு உரிய அங்கீகாரத்தையும், பெருமையினையும் தந்தமைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்** B.Sc
**நிறுவனத் தலைவர்**